**கவனிக்க.-** 2015.07.17 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1925 - 2015 ජූලි මස 24 වැනි සිකුරාදා - 2015.07.24

*1925 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1144 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1148 |


**கவனிக்க.-** அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் 2015, யூன் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூலை மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சு

**வணிக கப்பற்துறை செயலகத்தில் துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (பொறியியலாளர்), துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (கப்பல் தளம்), அரச கப்பல்கள் அளவையாளர், அரச கப்பல்கள் அளவையாளர் (கப்பல் தளம்), பரீட்சை பரிசோதகர் (பொறியியல்), பரீட்சை பரிசோதகர் (கப்பல் தளம்) போன்ற நிறைவேற்று சேவை வகுதியின் 1 ஆம் தரத்தைச் சேர்ந்த பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சின் வணிகக் கப்பற்துறை செயலகத்தில் மேற்போந்த பதவிகளை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் கோரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெற்றிட எண்ணிக்கை பின்வருமாறாகும் :-

| | பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (பொறியியலாளர்) | 02 |
| 2 | துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (கப்பல் தளம்) | 01 |
| 3 | அரச கப்பல்கள் அளவையாளர் | 01 |
| 4 | அரச கப்பல்கள் அளவையாளர் (கப்பல் தளம்) | 01 |
| 5 | பரீட்சை பரிசோதகர் (பொறியியல்) | 02 |
| 6 | பரீட்சை பரிசோதகர் (கப்பல் தளம்) | 01 |

1. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.-** இந்த அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை முடிவின்மீது ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளிலிருந்து வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இதன்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இந்த அறிவித்தலின் 6 ஆம் இலக்கத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் நடவடிக்கை முறைக்கு அமைவாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. தேவையான தகைமைகள் :

(i) கல்வித் தகைமைகள், அனுபவம் உட்பட பிற தகைமைகள் :

| பதவி | கல்வித் தகைமைகள் | அனுபவமும் பிற தகைமைகளும் |
|---|---|---|
| * துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (பொறியியலாளர்) | இலங்கை அல்லது ஐக்கிய இராச்சியம் அல்லது அவுஸ்திரேலியா அல்லது கனடா அல்லது சீனா அல்லது இந்தியா அல்லது பாகிஸ்தான் அல்லது நியூசிலாந்து அல்லது மலேசியா அல்லது சிங்கப்பூர் அல்லது தென் ஆபிரிக்கா அல்லது அயர்லாந்து ஆகிய நாடுகளில் அல்லது இவை புள்ள சான்றிதழை ஏற்றுக் கொள்வது சம்பந்தமாக இலங்கையுடன் இருதரப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ள நாடொன்றில் அரசாங்க கப்பற்துறை நிருவாக நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட பிரதான பொறியியலாளர் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல். | 3,000 கிலோ வோட்டுக்கு அதிகமான ஆற்றலுடைய பிரதான என்ஜின் ஒன்றைக் கொண்ட கடற் பிரயாணத்தில் ஈடுபடும் வணிகக் கப்பல் ஒன்றில் பிரதான பொறியியலாளராக ஆகக்குறைந்தது இரண்டு (02) வருட கால அனுபவம் இருத்தல். |
| * அரச கப்பல்கள் அளவையாளர் | | |
| * பரீட்சை பரிசோதகர் (பொறியியல்) | | |
| * துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (கப்பல் தளம்) | இலங்கை அல்லது ஐக்கிய இராச்சியம் அல்லது அவுஸ்திரேலியா அல்லது கனடா அல்லது சீனா அல்லது இந்தியா அல்லது பாகிஸ்தான் அல்லது நியூசிலாந்து அல்லது மலேசியா அல்லது சிங்கப்பூர் அல்லது தென் ஆபிரிக்கா அல்லது அயர்லாந்து ஆகிய நாடுகளில் அல்லது இவையுள்ள சான்றிதழை ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக இலங்கையுடன் இருதரப்பு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ள நாடொன்றில் அரசாங்க கப்பற்துறை நிருவாக நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட கப்பல் தலைவர் தேர்ச்சி சான்றிதழைப் பெற்றிருத்தல். | தனி எடை 3,000 தொன் கொண்ட கடல் பிரயாணத்தில் ஈடுபடும் வணிக கப்பல் ஒன்றில் தலைவராக ஆகக் குறைந்தது இரண்டு (02) வருடகால அனுபவம் இருத்தல். |
| * அரச கப்பல்கள் அளவையாளர் (கப்பல் தளம்) | | |
| * பரீட்சை பரிசோதகர் (கப்பல் தளம்) | | |

(ii) *உடற்தகுதி.-* விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

(iii) *பிற தகைமைகள் :-*

* விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாய் இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்றுக்கு பதவி ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளை எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. பணிக்கமர்த்தல் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையது மாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்தப்படல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் 3 வருடங்களைக் கொண்ட தகுதிகூர் நிலைக்கு உட்படுத்தப்படும். இந்தப் பதவிகளுக்காக 1 ஆம் தரத்திற்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு ஐந்து (5) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறமை காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2014.01.21 ஆந் திகதியிடப்பட்டதும் 01/2014 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு அமைவாக பதவியில் இணைந்து ஐந்து (5) வருட காலத்திற்குள் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சியினைப் பெற வேண்டுமென்பதோடு அரச கரும மொழியல்லாத மொழியொன்றின் மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் தகுதிகூர் காலப்பகுதிக்குள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்தல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதி, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்கத்தின் நிதி நியதி உட்பட பிற திணைக்கள கட்டளைகளுக்கும் இந்த நியமனமானது கட்டுப்படும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்றுக்கு 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- இந்தப் பதவிக்கு ரூ. 22,935 - 10 X 645 - 8 X 790 - 17 X 1,050-ரூ. 53,555 கொண்ட மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாவதோடு, இந்தச் சம்பள அளவுத்திட்டத்தின் 20 ஆம் படிநிலையில் அமர்த்தி (ரூபா 36,755) சம்பளம் வழங்கப்படும். (2006.04.25 ஆந் திகதியிடப்பட்டதும் 6/2006 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைவாக எஸ்எல்- 1-2006 சம்பள அளவுத்திட்டம்) இதற்கு மேலதிகமாக 60,000 ரூபாவைக் கொண்ட தொழிற்படியொன்றும் போக்குவரத்து வசதிகளும் உரித்துடையதாகும்.

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குப் பின்வரும் புள்ளி வழங்கும் முறை அடிப்படையாகக் கொள்ளப்படும் :-

| பரிசீலனை செய்து புள்ளி வழங்கப்படும் தலைப்புக்கள் | | | | ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|---|
| துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (பொறியியலாளர்), துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (கப்பல் தளம்), அரச கப்பல்கள் அளவையாளர், அரச கப்பல்கள் அளவையாளர் (கப்பல் தளம்), பரீட்சை பரிசோதகர் (பொறியியல்), பரீட்சை பரிசோதகர் (கப்பல் தளம்) | | | | |
| 1. | மேலதிக கல்வித் தகைமைகள் | | | 30 |
| | (அ) | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பொறியியல், விஞ்ஞானம், வணிகம், முகாமைத்துவம், போக்குவரத்து மற்றும் கொள்வனவு முகாமைத்துவம் அல்லது கப்பற்துறை போன்ற துறைகளுக்குரியதான பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் | (30 புள்ளிகள்) | |
| | (ஆ) | மேற்குறிப்பிட்ட துறைகளின்கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப் பின் படிப்பு டிப்ளோமா | (20 புள்ளிகள்) | |
| | (இ) | மேற்குறிப்பிட்ட துறைகளின்கீழ்,<br>- முதலாவது வகுப்பு பட்டம்<br>- இரண்டாம் வகுப்பு உயர் மட்ட பட்டம்<br>- இரண்டாம் வகுப்பு கீழ்மட்ட பட்டம்<br>(உச்ச தகைமைக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்.) | <br>(18 புள்ளிகள்)<br>(15 புள்ளிகள்)<br>(12 புள்ளிகள்) | |
| 2. | கல்வித் தகைமைகள் | | | 10 |
| | பதவிக்குரிய துறையில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில், | | | |
| | (அ) | ஒரு வருடத்துக்கான டிப்ளோமா பாடநெறியொன்றைக் கற்று அதனை நிறைவு செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் (மேலதிகக் கல்வித் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்படாத தகைமைகளுக்காக மாத்திரம்) | (10 புள்ளிகள்) | |
| | (ஆ) | ஆறு (06) மாத காலத்துக்கான பாடநெறியொன்றைக் கற்று அதனை நிறைவுசெய்து சான்றிதழ் பெற்றிருத்தல் (மேலதிகக் கல்வித் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்படாத தகைமைகளுக்காக மாத்திரம்) | (5 புள்ளிகள்) | |

| | பரிசீலனை செய்து புள்ளி வழங்கப்படும் தலைப்புக்கள் | | | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| 3. | மேலதிக அனுபவம் | | | 30 |
| | | ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகளின் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள ஆகக்குறைந்த அனு பவத்திற்கு மேலான அனுபவம் பெற்றுள்ள காலப்பகுதிக்கு (ஆண்டொன்றுக்கு 5 புள்ளிகள் வீதம் ஆகக்கூடுதலாக ஆறு (06) வருடங்களுக்கு) | | |
| 4. | துறைசார்ந்த பங்களிப்பு (வெளியீடு களும் புதிய கண்டுபிடிப்புகளும்) | | | 10 |
| 5. | கணினி ஆற்றல் (ஆகக்கூடிய தகை மைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங் கப்படும்) | | | 15 |
| | (அ) | பட்டம்/பட்டப்படிப்பில் பாட மொன்றாக கணினி/தகவல் தொழில்நுட்பம் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் | (15 புள்ளிகள்) | |
| | (ஆ) | அரசாங்கத்தினால் அங்கீகரிக் கப்பட்ட நிறுவனமொன்றிலி ருந்து பெற்றுக்கொண்ட கணினி தொடர்பான ஒரு வருட அல்லது அதற்கு மேற் பட்ட காலப்பகுதிக்கான டிப்ளோமா/சான்றிதழ் | (12 புள்ளிகள்) | |
| | (இ) | அரசாங்கத்தினால் அங்கீகரிக் கப்பட்ட நிறுவனமொன்றி லிருந்து பெற்றுக்கொண்ட கணினி தொடர்பான ஆறு (06) மாத அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கான டிப்ளோமா/சான்றிதழ் | (10 புள்ளிகள்) | |
| | (ஈ) | அரசாங்கத்தினால் அங்கீகரிக் கப்பட்ட நிறுவனமொன்றி லிருந்து பெற்றுக்கொண்ட கணினி தொடர்பான டிப்ளோமா/சான்றிதழ் (உச்ச தகைமைக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்.) | (08 புள்ளிகள்) | |
| 6. | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | | | 5 |
| | | மொத்தப் புள்ளிகள் | | 100 |

7. விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம் :

(i) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவது சகலவிதத்திலும் பூரணமான விண்ணப்பங்களைச் சமர்ப்பித் துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமாவர் ;

(ii) நேர்முகப் பரீட்சையில் சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளையும் உரிய விதத்தில் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும் ;

(iii) நேர்முகப் பரீட்சையில் தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு பின்வரும் ஆள் அடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பங்கள் 2015.08.24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ''வணிகக் கப்பற்துறை பணிப்பாளர் அதிபதி, வணிகக் கப்பற்துறை செயலகம், இலக்கம் 43/89, பிறிஸ்ரல் கட்டடம், 1 ஆம் மாடி, யோர்க் வீதி, கொழும்பு 01'' என்னும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவமொன்று இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை ஏ4 அளவிலான தாளில் தயாரித்து 1 ஆம் பக்கத்தில் இலக்கம் 1 இலிருந்து 7 வரையும், 2 ஆம் பக்கத்தில் 8 இலிருந்து 12 வரையும், 3 ஆம் பக்கத்தில் 13 இலிருந்து 15 வரையும் அமையும் விதத்தில் தயாரிக்கப்பட்டு சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (பொறியியலாளர்), துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (கப்பல் தளம்), அரச கப்பல்கள் அளவையாளர், அரச கப்பல்கள் அளவையாளர் (கப்பல் தளம்), பரீட்சை பரிசோதகர் (பொறியியல்), பரீட்சை பரிசோதகர் (கப்பல் தளம்) பதவிக்கு விண்ணப்பித்தல்'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் ஆணைபெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது 22,935 ரூபா மாதாந்த அடிப்படைச் சம்பளமொன்றைப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்துதல் வேண்டும்.

(v) ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை இயைபுள்ள திணைக்களத் தலைவர் களின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

(vi) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அத்துடன் தாமதமாதல் தொடர்பில் எவ்வித முறைப்பாடுகளும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

9. **பிழையான தகவல்களை முன்வைத்தல்.**- தங்கள் விண்ணப்பப் படிவத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் ஏதாவது உண்மையற்றவை யென அல்லது பிழையானவையென நியமனம் வழங்க முன்னர் தெரியவந்தால் தங்களுடைய அபேட்சகத் தன்மை இல்லாதொழியும். அத்தகைய உண்மையற்ற அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவந்தால் இதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குரியதாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

செயலாளர்,
துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சு.

துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சு,
இலக்கம் 19, சைத்திய வீதி,
கொழும்பு 1,
2015, யூலை 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்துக்கு)

**துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சு**

வணிகக் கப்பற்துறை செயலகத்தில் துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (பொறியியலாளர்), துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (கப்பல் தளம்), அரச கப்பல்கள் அளவையாளர், அரச கப்பல்கள் அளவையாளர் (கப்பல் தளம்), பரீட்சை பரிசோதகர் (பொறியியல்), பரீட்சை பரிசோதகர் (கப்பல் தளம்) போன்ற நிறைவேற்றுச் சேவை வகுதியின் 1 ஆம் தரத்தைச் சேர்ந்த பதவி

1. விண்ணப்பதாரரின் பெயர் :
   (i) முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
   (ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
   (iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரியும் தொலைபேசி இலக்கமும் :
   (i) அலுவலக முகவரி :----.
   தொலைபேசி இலக்கம் :----.

   (ii) சொந்த முகவரி :----.
   தொலைபேசி இலக்கம் :----.
   செல்லிடத் தொலைபேசி இலக்கம் :----.

3. பிறந்த திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

4. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றுக்கான வயது-

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

6. பால் (ஆண்/பெண்) :----.

7. திருமணமானவரா/திருமணமாகாதவரா/விதவையா என்பது பற்றி : ----.

8. கல்வித் தகைமைகளும் மேலதிக கல்வித் தகைமைகளும் :

| தகைமைகள் | தகைமை பெற்ற வருடம் | பாட விதானம் | சித்தி | நிறுவனத்தின் பெயர் | பிற |
|---|---|---|---|---|---|
| | | | | | |

9. தொழில் தகைமைகள் :

| தகைமைகள் | தகைமை பெற்ற வருடம் | பாட விதானம் | சித்தி | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. அனுபவம் தொடர்பான விபரங்கள் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | இந்தப் பதவிக்குரிய பணிகள் சுருக்கமாக | சேவைக் காலம் |
|---|---|---|---|
| | | | |

11. துறைசார்ந்த பங்களிப்பு (வெளியீடுகளும் புதிய கண்டுபிடிப்புகளும்) :----.

12. கணினி தொடர்பிலான தேர்ச்சி :

(அ) பட்டம் :----.
(ஆ) டிப்ளோமா :----.
(இ) சான்றிதழ் பாடநெறி :----.

13. தாங்கள் ஏதேனும் குற்றமொன்று சம்பந்தமாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானவையெனவும் பிழையற்றவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது தகவல்கள் உண்மையற்றவையென அல்லது பிழையானவையென நியமனம் வழங்க முன்னர் தெரியவந்தால் எனது அபேட்சகத் தன்மை இல்லாதொழியும் எனவும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் இந்தத் தவறு தெரியவந்தால் இதற்குரியதான நடவடிக்கைகளுக்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ................................ ஆந் திகதியன்று என் முன்னிலையில் அவருடைய கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

15. திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :
(ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.)

இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் கடமையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ......................................, தற்போது ................................... பதவியில் கடமையாற்றுகிறாரெனவும், அவருடைய வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானதெனவும், ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் இல்லையெனவும் அதுபற்றி நடவடிக்கை எடுப்பதற்குக் கருதவில்லையெனவும் உறுதிப்படுத்து கின்றேன். அவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ இலச்சினையும்.

திகதி :----.

7-1135

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

காணி அமைச்சு

**காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் நிறைவேற்று சேவைத் தொகுதியில் திணைக்களத்துடனான தரம் III இன் உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணி உபயோகம்) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை - 2015**

Examination for Recruitment of Assistant Director (District Land Use) for Land use Policy Planning Department - 2015

இத்திணைக்களத்தில் நிறைவேற்று சேவைத் தொகுதியில் தரம் III இன் உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணி உபயோகம்) பதவியில் நிலவுகின்ற 11 வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள அலுவலர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம், விண்ணப்பங்களைக் கீழே குறிப்பிடப்படும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், காணி உபயோகத் திட்டமிடல் திணைக்களம், இலக்கம் 31, பதிபா மாவத்தை, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05" எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைத் தொகுதியில் திணைக்களத்துடனான தரம் III இன் உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணி உபயோகம்) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை - 2015" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2015.08.21 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதமொன்று தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதப் படுத்துவதால் ஏற்படக்கூடிய இழப்பினை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்கின்ற விண்ணப்பதாரிகள் எழுத்திலான பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள். எழுத்திலான பரீட்சையில் அதிகூடிய திறமைகளைக் காட்டிய விண்ணப்பதாரிகள், வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்று 5 மடங்கினை ஆங்கில அகராதியின் ஒழுங்கு முறைப்படி தயாரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான பெயர் அட்டவணையைக் கொண்டு அமைவு முறையிலான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுவார்கள். பின்னர் எழுத்திலான பரீட்சையிலும், நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட, விண்ணப்பதாரிகளிலிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

நியமனம் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப் படுத்தப்படும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளை யின்படி தீர்மானிக்கப்படும்.

2. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இன் சம்பள சுற்றுநிருபத்திற்கு அமைவாக எஸ்எல்-1-2006 ரூபா 22,935-10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 ஆன (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்துடையதாகும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையது மாகும் ;

(ii) இப்பதவியில் நியமனம் பெறுகின்ற அலுவலர்கள் ஓராண்டு காலத்திற்கு பதில் கடமையாற்றுவதற்கு உட்படுவார்கள் ;

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/ 2014 இற்கும், அதனுடன் அமைந்தொழுகும் சுற்றுநிருபங்களின் பிரகாரம், பதவியில் சேர்ந்து 5 ஆண்டுகளுக்குள் அரச கரும மொழி தேர்ச்சியை ஏற்றவாறு பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் ;

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் ஒழுங்கமையும்.

4. **கல்வித் தகைமைகள்.**- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் புவியியல் அல்லது விவசாயம் தொடர்பான விசேட பட்டப்படிப்பு அல்லது புவியியல் பாடத்துடன் கூடிய சாதாரண பட்டம் பெற்றிருத்தல்.

5. **அனுபவம்.**- காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தில் அப்போது உதவி காணி உபயோக திட்டமிடல் அலுவலர் / காணி உபயோக திட்டமிடல் உதவியாளர் ஆகிய திணைக்களத்து பதவியில் சேவையாற்றியும், அப்பதவியில் 5 ஆண்டு காலம் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள தற்போது காணி உபயோகத் திட்டமிடல் அலுவலர் பதவியில் சேவையாற்றும் அலுவலராக இருத்தல் வேண்டும்.

6. **உடற் தகைமைகள் :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும்,

(ii) பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான அளவு உடல் உள ஆரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

7. **வயதெல்லை.**- தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களாவதால் வயதெல்லை ஏற்புடையதாகாது.

8. **ஏனைய தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாதல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் பதவிக்குச் ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான எல்லாத் தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

9. 9.1 **எழுத்திலான பரீட்சை :**

9.1.1 இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் பதவிக்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை கீழே குறிப்பிடப்படும் வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :

| பாட இலக்கம் | பாடங்கள் | மணித்தியாலங்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு | சித்தியடையும் புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|---|
| 1 | விடயத் துடன் தொடர்பு புடைய வினாப் பத்திரம் | 3 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| 2 | விவேகத் தேர்வு | 1 மணித்தியாலம் | 100 | 40% |

9.1.2 பாட விதானம் :

(அ) விடயத்துடன் தொடர்புடைய வினாத்தாள்.- இவ்வினாத்தாள் மூலம் பல்வேறு மட்டங்களில் காணி உபயோகம் பொருட்டு, விஞ்ஞான முறையில் காணிகளின் உபயோகத்தை திட்டமிடல் மற்றும் பல்வேறு உபயோகங்களுக்காக நிலத்தை தர்க்க ரீதியாக பிரித்தொதுக்கும் தொழில்நுட்ப அறிவைப் பரீட்சித்துப் பார்க்கப்படும் :

(1) காணி உபயோக பிரச்சினைகளை அடையாளம் காணல் மற்றும் அப்பிரச்சினைகளை குறைத்துக் கொள்வதற்கான முறைமைகளைத் தயாரித்தல் ;

(2) நிலத் தகுதி வகைப்படுத்தல் (Land Capability Classification) தொடர்பான அறிவு மற்றும் குறித்த வகைப்படுத்தலின் மூலம் விவசாய நிலங்களைத் தர்க்க ரீதியாக பிரித்தொதுக்குதல் ;

(3) நில மதிப்பீடு (Land Evaluvation) தொடர்பான அடிப்படை விடயங்கள் மற்றும் நிலத்தின் தகுதி (Land Suitability Classification) தொடர்பான வகைப் படுத்தல் பற்றிய அறிவு ;

(4) நிலத்தின் சிறப்பியல்புகள் மற்றும் நிலத்தின் தன்மைகள் Land Characteristics and land Qualities) ;

(5) நிலத்தின் பல்வேறு செயற்பாடுகளின் (வீடமைப்புகள், விவசாயம், கைத்தொழில், வனாந்தரங்கள் என்பன) பொருட்டு ஒதுக்கும்போது கவனிக்க வேண்டிய பிரதான காரணிகள் மற்றும் தற்போது பிரதேச, மாவட்ட மட்டத்திலான நில பயன்பாடு தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக ஸ்தாபித்துள்ள பொறிமுறை தொடர்பான அறிவு ;

(6) நில அரித்தழிப்பு, மண் பாதுகாப்பு முறைகள் மற்றும் அடிப்படை மண்ணின் அம்சங்கள் தொடர்பான அறிவைப் பரிசீலனை செய்தல் ;

(7) இலங்கையில் நில வள முகாமைத்துவம் மற்றும் அது தொடர்பாகவுள்ள நியதிச் சட்ட முறையிலான ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டதிட்டங்கள் தொடர்பான அறிவு.

(ஆ) விவேகத் தேர்வு.- சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும், பதிலளிப்புகளையும் சோதிப்பதன் மூலம் அவற்றை கிரகிப்பதில் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக்கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படும்.

10. **நேர்முகப் பரீட்சை :**

10.1.1 அமைவு முறையிலான நேர்முகப் பரீட்சை.- எழுத்துப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்று ஐந்து மடங்கினை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையால் புள்ளிகள் வழங்கப்படும்.

அழைப்பதற்காக எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் முறை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :

| | பரீட்சித்துப் பார்த்து புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| 2 | மொழித் தேர்ச்சி | 15 |
| 3 | தொழில்சார் தகைமைகள் | 20 |
| 4 | தகவல் தொழில்நுட்பம்/கணினி தொடர்பாக பெற்றுள்ள தகைமைகள் | 20 |
| 5 | மேலதிக அனுபவம் | 20 |
| 6 | நேர்முகப் பரீட்சையில் காட்டும் ஆற்றல் | 05 |
| | மொத்தம் | 100 |

11. **பரீட்சைக்கான நிபந்தனைகள் :**

(i) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் பதில் அளித்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. எல்லா பரீட்சார்த்திகளும் 2 வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும் ;

(ii) பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். பரீட்சைக் கட்டணத்தைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும் வண்ணம் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகத் திற்கும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் விளிம்பை விண்ணப்பப்படிவத்தில் கழறாதவாறு ஒட்டவும். குறித்த பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும் ;

(iii) பரீட்சைக்காகச் செலுத்திய கட்டணத்தை எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்துவதற்கோ அல்லது மற்றுமொரு பரீட்சைக்காக மாற்றுவதற்கோ இடமளிக்கப்பட மாட்டாது. பணக் கட்டளை அல்லது முத்திரை பொறுப்பேற்கப்பட மாட்டாது ;

(iv) இப்பரீட்சை கொழும்பு நகரத்தில் மட்டும் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் ;

(v) முழுமை பெறாத விண்ணப்பங்கள் அறிவிப்பின்றி நிராகரிக் கப்படும் ;

**குறிப்பு**.- அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கப் படும் திகதியில் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும்.

பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதை ஏற்றுக் கொள்ளுதலாக கருதப்படுதலாகாது ;

(vi) விண்ணப்பப்படிவத்தை 22-29 செ. மீ. அளவிலான ஏ4 கடதாசியில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்க வேண்டுமென்பதுடன், விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இலக்கம் 1 தொடக்கம் தலைப்பு இலக்கம் 7 வரை முதலாவது பக்கத்திலும், மீதியை அடுத்த பக்கத்திலும் உள்ளடக்கி தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கான தகவல்களை தமது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்குதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒழுங்கமையாத விண்ணப்பங்கள் மற்றும் முழுமைபெறாத விண்ணப்பங்கள் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் பிரதியைத் தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாகும். மேலும், பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்பத்திரத்தை பரீட்சை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவானதா என்பது தொடர்பாக விண்ணப்ப தாரரே ஆராய்ந்து பார்த்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு அமையாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகின்றேன். இத்துடன் உள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கவும் ;

(vii) அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்து விண்ணப்பங்கள் அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணை யாளர் நாயகத்தால் அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைத்தவுடன் அது தொடர்பாக குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிவிப்பொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடைபெறுவதற்கு ஆகக்குறைந்தது 5 நாட்களுக்கு முன்னராவது தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் இருந்தால் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி, தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்ப தாரி கொழும்பிற்கு வெளிப் பிரதேச வதிவிடலாளரெனில் குறித்த விபரங்களுடன், தொலைநகல் ஊடாக பரீட்சைக்கான அனுமதி அட்டையின் பிரதியினைத் துரிதமாக பெற்றுக் கொள்வதற்கு முடியுமான விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தை, அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைத்தல் மிகவும் பயனுடையதாகும். அவ்வாறு வினவும்போது, பரீட்சைத் திணைக்களத்தால் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தம்வசம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி/பரீட்சைக் கட்டணம் செலுத்தல் ஏற்புடையதாயின் அதற்கான பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் என்ப வற்றை அஞ்சலிடும்போது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டை தயாராக வைத்திருத்தல் பயனுடையதாகும்.

(viii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் பரீட்சையினைப் பிற்போடுதல் அல்லது இரத்துச் செய்தல் ஆகிய அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்தி ருக்கும்.

(ix) பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுத்தல் வேண்டும். குறித்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாதலும் வேண்டும்.

(x) *பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்.*- பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பானவர் திருப்தி அடையும் வண்ணம் எல்லாப் பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கிய தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

**கவனிக்க :**

(அ) விண்ணப்பப்படிவத்துடன் எதுவித ஆவணமோ அல்லது அதன் பிரதியையோ இணைத்தலாகாது ;

(ஆ) கோரும்போது ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தவறுகின்ற பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தமது மாவட்ட அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணி உபயோகம்) ஊடாக விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் எல்லா விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திக் கொள்ளுதல் கட்டாயமாகும்.

(xi) *பரீட்சைப் பெறுபேறுகள்.*- எழுத்துப் பரீட்சையில் உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்த பரீட்சார்த்திகள் வர்த்தமானி அறிவிப்பில் 10:1:1 பந்தியின்படி கட்டமைவு முறையிலான பரீட்சையில் தோற்றுதல் வேண்டும். எழுத்துப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்கின்ற புள்ளிகளின் மொத்தத்தின் முன்னுரிமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேறு அட்டவணை, செயலாளரினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் வழங்கப்படும்.

பரீட்சையில் தோற்றிய எல்லா விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகளைத் தனிப்பட்ட முறையில் அனுப்பிவைக்கப்படும் அல்லது www.results.exams gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

12. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், அவ்வப்போது அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள், காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் நிறைவேற்று தரத்திலான சேவைத் தொகுதிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் அதற்கு மேற்கொண்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

13. **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- நீங்கள் அனுப்பியுள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னர் அறியவந்தால் உங்களது பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்புச் செய்த பின்னர் அறியவந்தால் அதற்கான நடவடிக்கைகளின்கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14. இவ்வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி தீர்மானிக்கப்படும். அதே போன்று வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் அல்லது வெற்றிடங்களின் ஏதேனும் ஒரு பகுதியை நிரப்புதல் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின்படியே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
காணி அமைச்சு.

"மிஹிகத்த மெதுர",
இல. 1200/6, இராஜமல்வத்த ஒழுங்கை,
பத்தரமுல்லை.
2015, யூலை 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்**

நிறைவேற்று சேவைத் தொகுதியில் திணைக்களத்துடனான தரம் III இன் உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணி உபயோகம்) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை - 2015

Examination for Recruitment of Assistant Director (Distric Land Use) for Land Use Policy Planning Department - 2015

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4
(உரிய இலக்கத்தைக் கூட்டிற்குள் எழுதவும்)

1. பெயர் :

1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் இடப்படும் பெயர் ஆரம்பத்திலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னரும் இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

(உதா : GUNAWARDHANA H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. அனுமதி அட்டை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2.1 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழ்) :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. பெண்/ஆண் :
ஆண்-0, பெண்-1 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

5. திருமணமான/திருமணமாகாதவர் :
திருமணமான-1 ☐
திருமணமாகாதவர்-2

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

6. 6.1 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

6.2 2015.08.21 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

7. ஆரம்ப நியமனத் திகதி :----.

7.1 பதவி :----.
தரம் :----.

8. பெற்றுக்கொண்டுள்ள மொழித் தேர்ச்சி :----.

9. தற்போது சேவையாற்றும் மாவட்டம் :----.

10. பெற்றுக்கொண்டுள்ள உயர் கல்வித் தகைமைகள் (பட்டநிலை பின் படிப்பு/பட்டம்/டிப்ளோமா) :----.

(பரீட்சை மற்றும் சித்தியடைந்த பாடங்கள் தொடர்பாக உரிய காலப்பகுதிகளுடன் குறிப்பிடவும்.) :

11. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

11.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய அஞ்சல் அலுவலகம் :----.
11.2 பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
11.3 செலுத்திய தொகை :----.

பற்றுச்சீட்டை கழராதவாறு அதன் ஒரு விளிம்புப் பகுதியை இங்கு ஒட்டவும்.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் இத்தால் சான்றுப் படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயங்கள் பொய்யானதெனவோ அல்லது தவறானதெனவோ தெரிவுசெய்வதற்கு முன்னர் அறியவருமாயின், நான் தகைமையற்றவர் என்பதற்கு உட்படுவேன் எனவும், நியமனம் செய்த பின்னர் அறியவருமாயின் எதுவித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் அறிவேன். மேலும் பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகள் வழங்குதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப் படும் சட்டதிட்டங்களுக்கு ஒழுங்கமைவேன் எனவும் வெளிப்படுத்து கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

மேற்படி விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் அலுவலரால் சமர்ப்பிக்கும் தகவல்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளதாகவும், குறித்த பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்துகின்றேன்.

அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெற்றுள்ளார்/பெறவில்லை என்பதால் விண்ணப்பப்படிவத்தை பரிந்துரை செய்கின்றேன்/செய்யப்படவில்லை.

----,
பணிப்பாளர் நாயகத்தின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

7-1203

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.